RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s329

OPEN ACCESS

# குழந்தைப் பாடல்களில் சமூகமாற்றச் சிந்தனைகள்

**நா. வெண்முகில் [அ, *]**

[அ] தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை - 625002, தமிழ்நாடு, இந்தியா.

# Social Change Thoughts in Children's Songs

**N. Venmuhil [a, *]**

[a] Tamil Research Centre, Lady Doak College, Madurai-625002, Tamil Nadu, India

* Corresponding Author: venmuhil@ldc.edu.in

Received: 13-04-2021
Revised: 23-04-2022
Accepted: 10-05-2022
Published: 16-07-2022

**ABSTRACT**

Children's minds love, admire, and cherish the songs that the mind enjoys and the heart wants to protect. All the thoughts expressed through songs are deeply rooted in the minds of children. Grown-up adults have imprinted the songs they heard in their childhood as engraved in a green tree. That is why songs occupy a prime position in children's literature. In today's society, which is showing initiatives in economic search, parents who spend time with their children have become less. Mobile phones have taken over the beautiful pastimes of children. As a result, apart from affecting children's physical health and mental health, an environment is created in which they grow up as a socially irresponsible generation. If this situation needs to be changed, children should be given an opportunity to understand the society in which they live from their childhood. Children's songs provide such an opportunity. Children's songs teach personal life, love for other living beings around us, and responsibility towards society. This article emphasises the need to put such valuable works of children's songs into the hands of children and identifies the children's songs that do the work of raising responsible children.

**Keywords:** Children's Songs, Generation, Mental Health, Social Change

## முன்னுரை

கதைகள், பாடல்கள், விளையாட்டுகள் ஆகியவை குழந்தைகளின் வாழ்வில் இன்றியமையாதவையாக உள்ளன. கதைகளைக் கேட்டும், சொல்லியும் வளரும் குழந்தைகளும், பாடல்களைக் கேட்டும் பாடியும் வளர்கின்ற குழந்தைகளும், ஓடியாடி விளையாடுகின்ற குழந்தைகளும் மனநலத்துடனும் உடல்நலத்துடனும் சமூகப் பொறுப்புணர்வோடும் கூடியஎதிர்காலத்தைப் பெறுகின்றன. இம்மூன்றனுள் முதன்மையானதாக, குழந்தைகள் பிறக்கும் நாள் முதலாய் அவர்களுடன் பயணிக்கும் வாய்ப்பைப் பெறுவனவாகப் பாடல்கள் அமைகின்றன. குழந்தைகளின் ஆழ்ந்த உறக்கத்திற்குத் தாலாட்டுப் பாடல்கள் பெருந்துணை செய்கின்றன. தொடர்ந்து, குழந்தைகளின் வளர்ச்சிக் காலக்கட்டங்களில் பல்வேறு நிலைகளில் பாடல்கள் முக்கிய பங்காற்றுகின்றன. குழந்தைகளின் மனம் முதன்மையாய் விரும்புவதும், ரசிப்பதும், மனத்திலிருத்திப் பாதுகாக்க விழைவதும் பாடல்களையே. பாடல்களின்வழி வெளிப்படும் கருத்துகள் யாவும் குழந்தைகளின் மனதில் ஆழ வேரூன்றிவிடுகின்றன. வளர்ந்த குழந்தைகளான பெரியவர்களும் குழந்தைப் பருவத்தில் தாம் கேட்ட பாடல்களைப் பசுமரத்தாணியாய்த் தம் மனதில் பதித்துவைத்துள்ளனர். எனவேதான், குழந்தை இலக்கியங்களில் பாடல்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன.

வினாக்களால் நிறைந்த குழந்தைகளின் மனதில் பொருத்தமான விடைகளைக் கொண்டு சேர்க்கும் பணியினையும், பெற்ற விடைகளின்வழிச் சமூகத்தை அணுக வேண்டியமுறைகளை கற்றுக்கொடுக்கும் பணியினையும் பாடல்கள் செய்கின்றன. இசையோடும், சொல்நயத்தோடும், எளிதானபுரிதலைக் கொடுக்கும் வண்ணம் கட்டமைக்கப்படுகின்ற இப்பாடல்கள் சமூக வாழ்வியலைக் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கின்றன. குழந்தைகளின் பெருவிருப்பமாய் அமைகின்ற இப்பாடல்கள், அக்குழந்தைகளின் மனதைச் செம்மைப்படுத்துவதன்வழிச் சமூகத்தின் களைகளை வேரறுத்து சமூகத்தை மேம்படுத்துவதற்கான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்னும் எண்ணத்தைக் குழந்தைகளின் மனதில் விதைக்கின்றன என்பதை எடுத்தியம்புவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது. பூவண்ணன் தொகுத்துள்ள 'குழந்தைப் பாடல்கள்', குழ. கதிரேசனின் 'கூட்டாஞ்சோறு', பாவண்ணனின் '8 மாம்பழங்கள்' ஆகிய மூன்று நூல்களை முன்னிறுத்தி இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## நல்லிணக்கம் நாடும் மனம்

உலகில் உயர்ந்தவர் என்றும் தாழ்ந்தவர் என்றும் எவரும் இல்லை. ஆனால், மனித மனம் சாதி, சமயம், நிறம், மொழி என்று தனக்குள் தானே கற்பிதங்களைக் கொண்டு வேறுபட்டிருக்கிறது. இவ்வேறுபாட்டினால மனிதர்களிடையே இருக்க வேண்டிய இணக்கம் அறுபட்டுள்ளது. தனி மனிதப் பிணக்கம் சமூகப் பிணக்கமாக உருக்கொண்டு சகிக்க இயலாத சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. காலங்காலமாய்ச் சமூகத்தில் புரையோடிக் கிடக்கின்ற இவ்வேறுபாடுகளை வேரறுக்க வேண்டியது ஆகப்பெரிய சமூகக் கடமையாக உள்ளது. வேறுபாடுகளில் ஊறிப்போய், விலகிவர மறுக்கும் வளர்ந்த மனிதர்களிடம் நல்லிணக்கத்தைக் கொண்டு சேர்ப்பது நீண்டதூரப்பயணமான உள்ளது. இச்சூழலில், எதிர்வரும் தலைமுறையிடம் வேறுபாடற்ற சமூகத்தைக் கட்டமைக்க வேண்டியதன் தேவையை உணர்த்த வேண்டிய கடப்பாடு மேலோங்கி உள்ளது. இந்தத் தேவையை நிறைவு செய்யும் பணியைக் குழந்தைப் பாடல்கள் செய்கின்றன. சான்றாக,

"மாடியிலிருந்து பார்க்கிறேன்
மாதா கோயில் தெரிகிறது
கோடியில் என்ன தெரிகிறது?
கோவில் கோபுரம் தெரிகிறது
இங்கே என்ன பார்க்கின்றேன்
இஸ்லாம் பள்ளி தெரிகிறது
எங்கள் வீட்டு மாடியிலே
எல்லாம் ஒன்றாய்த் தெரிகிறது"

என்னும் பாடலை இளையவன் என்னும் குழந்தைப் பாடலாசிரியர் முன்வைக்கிறார் (Poovannan, 2012). குழந்தையின் பார்வையில் மாதா கோயிலும், கோவில் கோபுரமும், இஸ்லாம் பள்ளியும் ஒன்றாகவே தெரிகின்ற யதார்த்தத்தை இப்பாடல் வலியுறுத்துகிறது. குழந்தைகள் மனதில் வேறுபாடு இருப்பதில்லை என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

"அகமது அலியைப் பாருங்கள்
அன்பாய்ப் புன்னகை பூக்கின்றான்
மேரி மரியாள் பாருங்கள்
மிகவும் அன்பாய் இருக்கின்றாள்
சீதா பணிவாய் இருக்கின்றாள்

சிரிக்கப் பேசி மகிழ்கின்றாள்

பெயரில் ஒளிந்தது என்ன மதம்

என்றே பார்ப்பது கிடையாது

பிஞ்சு நெஞ்சில் நஞ்சில்லை

பிரிவினை என்பதும் தெரியாது."

எல்லா சமயங்களும் அன்பையே போதிக்கின்றன உயிர்களின் மீதான பரிவையே வலியுறுத்துகின்றன என்பதனையும் குழந்தைப் பாடல்கள் பதிவுசெய்கின்றன (Kathiresan, 1998). விதைக்கப்படாதவரை வேறுபாடுகள் தோன்றுவதில்லை என்பதை உணர்த்துவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

## பிரிவினையை விரும்பாப் பெருமனம்

பெரியவர்களின் கற்பிதங்கள் குழந்தைகளைப் பாதிக்காதவரை அவர்களின் உலகம் அன்பினாலும் நட்பினாலும் நிறைந்துள்ளது. பிரிவினையை விரும்பாத மனம் படைத்தவர்களாகவே குழந்தைகள் இருக்கின்றனர். தன்னையொத்தவர்களோடு பழகும்பொழுதும், படிக்கும்பொழுதும், ஆடும்பொழுதும், பாடும்பொழுதும், விளையாடும்பொழுதும் அவர்களடையே சாதி, சமயம், நிறம், மொழி என எவ்வித வேறுபாடுகளும் கோலோச்சுவதில்லை. குழந்தைகள அவ்வேறுபாடுகளை அனுமதிப்பதுமில்லை. இவ்வுண்மையைப் புலப்படுத்தும் வண்ணம் 'எல்லோரும் மனிதர்களே' என்னும் குழ. கதிரேசனின் பாடல் அமைந்துள்ளது.

"பள்ளியில் நாங்கள் கூடுகின்றோம்

பிரிவினை மறந்து ஆடுகின்றோம்

அன்பு வேர்கள் எம்நெஞ்சில்

ஆழம் பாய்ந்துஇருக்கிறது

எத்தனை மதங்கள்வந்தாலும்

எங்களை அசைக்க முடியாது" (Kathiresan, 1998)

மேலும், தனக்குள் இல்லாத ஆனால் சமூகத்தில் மேலோங்கியிருக்கும் பிரிவினைகளை விரும்பாத குழந்தைமனம் அப்பிரிவினையை நீக்கிவிட்டுத் தான் விரும்பும் புதிய உலகைப் படைக்க விரும்புவதை,

அன்புத் தங்கை, அறிவுத் தங்கை

எங்கே போகிறாய்?

இன்பம் தழைக்கும் இனிய உலகைப்

படைக்கப் போகிறேன்

இன்பம் தழைக்க இன்னல் விலக்க

என்ன செய்குவாய்?

துன்பச் சாதிச் சமயப் பூசல்

ஒழிக்கப் போகிறேன்" (Poovannan, 2012)

என்னும் வரிகளைக் கொண்ட 'எங்கே போகிறாய்?' என்னும் பாடலும்,

"ஜாதி பேதச்சிறுமைகள்

சமயவாதப் பிரிவுகள்

ஏதும் இந்த நாட்டிலே

இல்லை என்று போக்குவோம்”

என்னும் வரிகளைக் கொண்ட 'தேச சேவை' என்னும் பாடலும் புலப்படுத்துகின்றன (Poovannan, 2012). இங்ஙனம் குழந்தைப் பாடல்கள் சாதி, சமயப் பிணக்கமில்லாச் சமூகத்தை உருவாக்கும் சிந்தனைகளைக் குழந்தைகள் மனதில் விதைக்கின்றன என்பதை அறிய முடிகிறது.

## இயலாதோருக்கு ஈயும் மனம்

உண்ண உணவும், உடுக்க உடையும், உறங்க உறைவிடமும் எல்லோருக்கும் அமைவதில்லை. இம்மூன்றும் கிடைக்கப்பெற்ற குழந்தையின் மனதில் இவை கிடைக்காமல் தவிக்கும் மனிதர்களைப் பார்க்கையில் வினா எழுகின்றது. விடை கிடைக்காவிடினும் அந்நிலையை மாற்ற வேண்டும் என்னும் எண்ணம் மேலிடுகிறது. அவ்வெண்ணத்தினை வெளிப்படுத்தும் வண்ணம் அழ. வள்ளியப்பா பின்வரும் பாடலை வடிவமைத்துள்ளார்.

“என்னிடம் மந்திரக்கோல் ஒன்றும்

இருந்தால் அதனால் என்செய்வேன்?

மண்ணைப் பொன்னாய் மாற்றிடுவேன்;

வாரி வாரிக் கொடுத்திடுவேன்;

சின்னஞ் சிறைய குடிசைகளைச்

சிறந்த மாளிகை ஆக்கிடுவேன்

பலவிதமான உணவுகளும்

பட்டாடைகளும் வரவழைப்பேன்

உலகில் உள்ள யாவருக்கும்

உதவிப் பஞ்சம் போக்கிடுவேன்.”

இப்பாடலைக் கேட்கின்ற, பாடுகின்ற குழந்தைகளின் மனதில் எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கவேண்டும் என்னும் எண்ணம் மேலிடுவது திண்ணம் (Poovannan, 2012). ஓரிடத்தில் செல்வம் மொத்தமாய்க் குவந்திடுவதும் வேறிடத்தில் வறுமை தாண்டவமாடுவதையும் கேள்வி கேட்கும் நிலைப்பாட்டினையும் அதனை மாற்றுவதற்கான வழியினைக் கண்டறிய வேண்டும் என்னும் சிந்தனையையும் குழந்தைகள் மனதில் இத்தகைய பாடல்கள் ஏற்படுத்துகின்றன.

## இயற்கையோடு இயைந்த மனம்

இயந்திர மயமாக மாறிப் போன மனித வாழ்வில் இயற்கையின் அளப்பரிய ஆற்றலும் நன்மையும் தேவையும் குறித்த சிந்தனைகள் அருகிப்போயின. தன் பசியைத் தீர்க்கும் தாவரங்கள் குறித்த அடிப்படை ஞானமற்றவர்களாகவும், அவற்றை வளர்ப்பதன் தேவையை உணராதவர்களாகவும் மனிதர்கள் மாறியுள்ளனர். தன்னைச் சுற்றியுள்ள சூழல் குறித்த பிரக்ஞையற்றவர்களாக மனிதர்கள் மாறிவிட்டனர். மாறாக, தன்னைச் சுற்றியுள்ள, தன் பசியைப் போக்கும் தாவரங்களைக் குறித்த அறிமுகத்தையும், அவை வளருகின்ற பாங்கினைக் குறித்த அறிவினையும், அவற்றை நேசித்து, வளர்த்துக் கொண்டாட வேண்டியதன் அவசியத்தையும் குழந்தைப் பாடல்கள் பதிவுசெய்கின்றன.

கையில் கிடைக்கும் பொருள்களை வைத்து, வீடுகட்டி விளையாடும் குழந்தைகள் அந்த வீட்டின் வாசலில் செடி நட்டு மகிழ்வதாய்ப் பாவண்ணன் பாடல் அமைத்துள்ளார்.

“குழிகள் தோண்டி சாம்பல் தூவி

செடிகள் ஊன்றினோம்

நின்றுபார்த்துச் சொல்லுங்கம்மா

எப்படி இருக்குது?”

செடிவளர்ப்பினைக் குழந்தைகளிடையே அறிமுகப்படுவதாய் இப்பாடல் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது (Paavannan, 2017).

“நாங்கள் கட்டிய பந்தலிலே

அவரைக் கொடிபடருது

கம்பத்தோடு ஒட்டிக்கொண்டு

கணுக்கணுவாய் ஏறுது

நான்கு வார இடைவெளியில்

உச்சிப் புள்ளியைத் தொட்டது

நத்தை மூக்கைப் போலவே

கொடியின் நுனியில் அசையுது”

இப்பாடலில், தாங்கள் நட்டுவைத்த அவரைக்கொடியின் வளர்ச்சியைக் குழந்தைகள் ரசிக்கின்ற மனநிலைப் புலப்படுகிறது (Paavannan, 2017).

நட்டு வைத்த செடி, நன்றாக வளரும் பொருட்டு நீர் பாய்ச்சி, உரமூட்டி, பெயர் சூட்டிப் பாதுகாக்கும் குழந்தைகளின் செயல்களைப் பின்வரும் பாடல் புலப்படுத்துகிறது.

“எங்கள் வீட்டுத் தோட்டத்தில்

இரண்டு செடிகள் நட்டோம்

நாள் முழுக்கப் பேசிப்பேசி

நல்ல பெயர்கள் வைத்தோம்

வேளா வேளைக்கு நீரூற்றி

வாரா வாரம் உரம்வைத்தோம்

வள்ளியும் வெள்ளியும் ஊட்டமுடன்

ஓங்கி உயர்ந்து வளர்ந்தனவே”

தான் வைத்த செடியின் வளர்ச்சியைக் கண்டு, மனம் பூரித்து, அச்செடியின் அழகினை ரசித்துக் கொண்டாடிப் பாடும் குழந்தையின் மனநிலையைப் பின்வரும் பாடல் பதிவுசெய்துள்ளது (Paavannan, 2017).

“நேற்று எங்கள் வீட்டிலே

பூசணிப்பூ பூத்தது

காற்றடிக்கும் வேகத்திலே

கழுத்தை மெல்லத் திருப்புது

குட்டி அரசி போலவே

கூரை மேலே சிரிக்குது

தொட்டுப்பார்க்க ஆசைதான்

நெஞ்சுக்குள்ளே சுரக்குது"

உணவையும் உணவுப்பொருளையும் விலைக்கு வாங்கிட விரும்புவோர், அவற்றை விளைவித்திடும் பணியை விரும்புவதில்லை (Paavannan, 2017). உணவே மருந்து என்னும் நிலை மாறி, நஞ்சாகிப் போன உணவை உட்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ள இக்காலக்கட்டத்தில் ஆரோக்கியமான உணவுகளை உற்பத்தி செய்யும் நுட்பத்தினை அறிந்துகொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு இதன் தேவையை அறிவுறுத்தும் வண்ணம்,

"தோழா, தோழா ஓடிவா,

தோட்ட வேலை செய்யவா;

பாழாய்ப் போகும் நீரதனைப்

பயன்படச் செய்வோம் ஓடிவா.

வெண்டை விதையை நட்டிடுவோம்,

வேண்டிய தண்ணீர் கொட்டிடுவோம்;

தண்டுக் கீரை விதைத்திடுவோம்

தானியம் விளைய உழைத்திடுவோம்

கத்தரி நாற்றை நட்டிடுவோம்,

கணிசமாய்த் தண்ணீர் பாய்ச்சிடுவோம்,

கொத்தவ ரைச்செடி நட்டிடுவோம்,

குவலயம் வாழப் பயிர் செய்வோம்."

என்னும் வரிகளைக் கொண்ட 'தோட்ட வேலை' என்னும் பாடல் அமைந்துள்ளது. மேலும், தோட்ட வேலையினை மேற்கொள்ள வேண்டியதன் தேவையாகத் தனிநபரின் வாழ்வியலைக் குறிப்பிடாது உலகத்தின் நன்மைக்காக என்று குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது (Paavannan, 2017). இங்ஙனம், குழந்தைப் பாடல்கள் தாவரங்கள் மீதான கவனத்தையும், ஈர்ப்பையும் குழந்தகள் மனதில் ஏற்படுத்துவதோடு, தாவரங்களைக் கொண்டாடும் மனநிலையையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன.

## உயிர்களை நேசிக்கும் மனம்

பசி, தாகம், வலி, தூக்கம் உள்ளிட்டவை எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை. விலங்குகளும், பறவைகளும் விதிவிலக்கல்ல. இவ்வுயிர்களின் மீதான கருணையையும் அன்பையும் குழந்தைகளின் மனதில் விதைக்கும் பணியைக் குழந்தைப் பாடல்கள் செய்கின்றன. தன்னைப் போலவே பிற உயிர்களையும் நேசிக்கும் மனதினைப் பாடல்கள் வார்த்தெடுக்கின்றன. அவ்வுயிர்களின் பசியறிந்து உணவளிக்கவும், தாகமறிந்து நீர் கொடுக்கவும், வலியறிந்து வருந்திடவும் இப்பாடல்கள் கற்றுக்கொடுக்கின்றன. சான்றாக,

"குட்டிக் குரங்கே ஓடிவா

குதித்துக் குதித்து ஓடிவா

பூவன் பழம் பிடிக்குமா?

பேயன் பழம் பிடிக்குமா?

கடலை சுண்டல் பிடிக்குமா?

கரும்புத் துண்டு பிடிக்குமா?

உனது விருப்பம் என்னவோ

ஒரே நொடியில் தருகிறேன்"

என்னும் பாவண்ணனின் பாடல் வரிகள் குரங்கின் மீதான குழந்தையின் நேசத்தைப் புலப்படுத்துகின்றன (Paavannan, 2017).

'பூனைக்கு அழைப்பு' என்னும் பாவண்ணனின் பாடலானது, அனைவரின் வீட்டுக்கும் அடிக்கடி விருந்தாளியாக வரும் பூனையினைக் கொண்டாடி, அதற்கு உணவளிக்க விரும்பும் குழந்தையின் அன்பு மனத்தினைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

"தட்டு நிறைய பாலை வைத்தேன்

தயிர்சோறு பிசைந்து வைத்தேன்

வெள்ளரிக்காய் எடுத்து வைத்தேன்

துண்டு துண்டாய் நறுக்கி வைத்தேன்

பஞ்சை நிறைத்து மெத்தை செய்தேன்

பட்டுத்துணியில் விரிப்பும் வைத்தேன்

குட்டிப் பூனை ஓடிவா

குறும்புப் பூனை ஓடிவா"

தன்னைச்சுற்றியிருக்கும் உயிர்களின் தேவையறிந்து உணவளிக்க வேண்டும் (Paavannan, 2017). என்னும் மதிநுட்பத்தினை ஏற்படுத்துவதாக,

"கன்றுக்குட்டி கன்றுக்குட்டி

உணவு வேண்டுமா?

கழனிமேட்டில் புல்லறுத்து

உனக்குத்தரட்டுமா?

ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி

உணவு வேண்டுமா?

அகத்திக்கீரை வாங்கிவந்து

உனக்குத் தரட்டுமா?

முயல்குட்டி முயல்குட்டி

உணவு வேண்டுமா?

முட்டைக்கோஸ் இலையைக்கிள்ளி

உனக்குத் தரட்டுமா?"

என்னும் வரிகளைக் கொண்ட இப்பாடல் அமைந்துள்ளது. மேலும், இப்பாடல், தன்னைச் சுற்றியுள்ள உயிர்களின் வாழ்வியலைக் குழந்தைகள் கவனிக்க வேண்டும் என்னும் சிந்தனையையும் பதிவுசெய்துள்ளது (Paavannan, 2017).

பிற உயிர்களின் துன்பமறிந்து இரங்கும் குழந்தைகளின் மனத்தினைப் பாடல்கள் சில பதிவுசெய்கின்றன. சான்றாக,

"ஆயிரம் ஆயிரம் சிறுகால்கள்

ஆரே உனக்குத் தந்தவர்கள்

ஆயிரங்காலில் முள் தைத்தால்

அய்யோ எத்தனை நோவாகும்!

உருக்குச் சக்கர ரயிலைப்போல்

ஒழுங்காய்த் தரைமேல் செல்கின்றாய்

செருப்புச் சோடுகள் வேண்டாவோ?

சின்னக் கால்களும் வலியாவோ?”

என்னும் வரிகளைக் கொண்ட 'மரவட்டை' பாடலானது மரவட்டைப் பூச்சியின் மீதான அருவருப்பற்ற வியப்புணர்வையும், ஆயிரம் கால்களைக்கொண்ட அப்பூச்சிக்கு முள் தைத்தால் வலிக்கும் என்னும் வருத்தத்தையும், செருப்புகள் கொடுத்தால் என்ன என்னும் அக்கறை உணர்வையும் குழந்தைகளிடையே ஏற்படுத்துகிறது (Poovannan, 2012).

'வழி மறந்த எலி' என்னும் பாடலானது தன் வளை வீட்டிற்குச் செல்வதற்கான வழியினை மறந்த குட்டி எலியின் துன்பத்தைக் கண்டு வருந்தும் குழந்தையின் மனதினைக் காட்சிப்படுத்துகிறது.

“வளையிலிருந்து குட்டி எலி எட்டிப்பார்த்தது

வாழை மரத்தைச் சுற்றிக்கொண்டு ஓடிச்சென்றது

வளைக்குத் திரும்பும் திசையை மறந்து விட்டது

வடக்கு தெற்கு குழப்பத்தாலே திகைத்து நின்றது

குட்டி எலியின் தவிப்பைப் பார்த்து மனசு துடிக்குது

வழியைச்சொல்லி எப்படித்தான் புரிய வைப்பது?”

குட்டி எலியின் துன்பத்தைத் தனக்கு நேர்ந்த துன்பமாக நினைத்தால் மட்டுமே அதனைத் தீர்ப்பதற்கான வழியைச் சிந்திக்க இயலும் (Paavannan, 2017). இங்ஙனம், பிற உயிர்களின் மீதான அன்பினையும், அக்கறையினையும், அவற்றின துன்பத்தின் பொருட்டு இரங்கும் கருணையினையும் குழந்தைப் பாடல்கள் கற்றுக்கொடுக்கின்றன.

## சூழலைப் பேண விழையும் மனம்

இயற்கையோடு இயைந்த வாழ்வியல் இருந்தவரை மனிதர்கள் பெரிதும் துன்பத்திற்கு ஆளாகவில்லை. மாறாக, நுகர்வின் பெருவெறியில் சிக்கி, இயற்கைக்கு மாறான வாழ்வியலைக் கையில் எடுத்ததன் விளைவாக நலமான வாழ்வு கைநழுவியது. இனியேனும், செய்த தவறுகளைத் திருத்திக்கொள்வதோடு, தவறுகளின் விளைவுகளைச் சமன் செய்வதற்கானப் பணியினை மேற்கொள்ள வேண்டும். அதன் முதல்படியாக, இயற்கையோடு இயைந்து வாழ வேண்டியதன் தேவையையும், இயற்கையைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் இன்றைய குழந்தைகளின் மனதில் விதைக்க வேண்டும். குழந்தைப்பாடல்கள் இப்பணியினைச் செவ்வனே செய்கின்றன. மு. நடராசனின் 'எந்த நாளும் வசந்தந்தான்' என்னும் பாடலானது, காலங்காலமாய்ச் செய்த வினையின் இன்றைய அறுவடையைக் காட்சிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

“கோடை வெயில் தகிக்கிறதே

கொடுமை தாங்க முடியலையே

உயிர்கள் சோர்ந்து மடிகிறதே

உள்ளம் துடியாய்த் துடிக்கிறதே!

ஆண்டுக்கு ஆண்டு வெப்பநிலை

அதிகம் ஆகுது அதனாலே

தண்ணீர் கூட இல்லாமல்

தவியாய் உயிர்கள் தவித்திடுதே!

வெட்டிப் போட்டோம் மரங்களையே

வெப்பம் வாட்டுது உயிர்களையே

இயற்கை 'ஏசி'யை இழந்தோமே

இடுக்கண் வந்தது சோர்ந்தோமே!

ஏற்ற வகையில் இயற்கையினை

எழிலாய்ப் பேணிக் காத்திட்டால்

எந்த நாளும் வசந்தந்தான்

ஏற்பீர்; தொல்லை இனியில்லை!" (Poovannan, 2012)

மரங்களை அழித்ததன் விளைவாகத் தகிக்கும் வெயிலின் கொடுமையினை எடுத்துச் சொல்வதோடு, இயற்கையினைப் பேணிப்பாதுகாப்பதைத் தவிர வேறு வழியில்லை என்னும் உண்மையினையும் இப்பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

எல்லாவற்றையும் பணமாகப் பார்க்கும் இன்றைய மனிதர்களின் மனப்போக்கினால் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவினையும், பெருநுகர்வு வெறியினால் ஒட்டு மொத்த உலகும் குப்பை மலையாய் மாறியுள்ள நிலையினையும் 'நெல்லை கவிதாசன்' தன்னுடைய பாடலில் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

"அழியும் காட்டின் வளமும் - பல

ஆலை கக்கும் புகையும்

குவியும் குப்பை மலையும் - உயிர்

குடிக்கத் தானே செய்யும்

நாளை வாழ்க்கை வேண்டும் - என்ற

நல்ல எண்ணம் இருந்தால்

வேளை இதுதான் பாப்பா - இன்றே

விழித்துக் கொள்வாய் பாப்பா!" (Poovannan, 2012)

இனியேனும் விழித்துக்கொள்ளவில்லையெனில் உயிர்கள் வாழ்வதற்கு இயலா நிலை ஏற்படும் என்பதையும் இப்பாடல் உணர்த்துவதை அறிய முடிகிறது.

தனிமனித மாற்றத்தினால் மட்டுமே சமூக மாற்றத்தினை எட்ட இயலும். எனில், மனிதர்தம் தனிப்பட்ட வாழ்க்கையில் பொதுநல நோக்கில் மாற்றிக்கொள்ள வேண்டிய பழக்கங்கள் ஏராளமாய் உள்ளன. அப்பழக்கங்களினால் ஏற்படும் சூழலியற் கேடுகளும் ஏராளமாய் உள்ளன. அக்கேடுகளை எடுத்துச் சொல்வதாய் குழ. கதிரேசனின் பின்வரும் பாடல் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

"பெருநகர்த் தெரு உடல்நலத்துக்குக் கேடு!

தெருவெங்கும் கிடக்குதுஎச்சில் காடு!

வெண்புகைச் சுருளும் வளையம் போடும்!

வருவோர் போவோர் மூக்கில் ஏறும்!

உடைத்த பூசணி தெருவில் கிடக்கும்!

தெருவைச் சிவப்பாய் மாற்றிச் சிரிக்கும்!

தெருவில் சாக்கடைத் திறந்தே கிடக்கும்!

அடிக்கடி ஆளை விருந்தாய்க் கேட்கும்!

நோய்வருமுன் அதை விழிப்புடம் இருந்தே!

தடுத்திட வேண்டும் பெருந்திரளாக! (Kathiresan, 1998)

மனிதர்களின் பழக்கவழக்கங்கள் சக மனிதர்களையும், பிற உயிர்களையும், சமூகத்தினையும், சூழலையும் பாதிக்கின்றன என்னும் உண்மையினை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மேலும், இவற்றை மாற்ற வேண்டுமாயின் இதன் தீவிரத்தை உணர்ந்து திரளாகச் சேர்ந்து செயல்பட வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகின்றன.

## முடிவுரை

குழந்தை இலக்கியத்தின் முன்னோடியாகவும் முதன்மையான வகைமையாகவும் பாடல்கள் திகழ்கின்றன. காலம் காலமாக, குழந்தைப்பாடல்கள் சமூக மேம்பாட்டிற்குத் தேவையான சிந்தனைகளைக் கருப்பொருளாகக் கொண்டமைந்துள்ளன. எனினும், இன்றைய சூழலில் சமுகத்தின் காணக்கிடக்கும் பல்வேறு களைகளை வேரறுப்பதற்கு இப்பாடல்களை, இன்றைய குழந்தைகளிடையே கொண்டுசெல்ல வேண்டிய பொறுப்பு பெரியவர்களுக்கு உள்ளது. குழந்தைகளின் இன்றைய உலகமும், எதிர்கால வாழ்வும் நலமாகவும் வளமாகவும் இருக்கும் பொருட்டுத் தேவையான சமூகச் சிந்தனைகளைஅவர்களின் மனதில் விதைத்துச் சமூகப் பொறுப்புள்ளவர்களாக அவர்களை உருவாக்க வேண்டிய கடமை இன்றியமையாததாக உள்ளது. பெருந்தொற்றுக் காலத்தில் போராட்ட வாழ்க்கையை வாழ்ந்து வருகின்ற சூழலில் அலைபேசியின் அதிரிவுகளிலும் தொலைகாட்சியின் பெருவெளிச்சத்திலும் இருளில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஒரு தலைமுறையை மீட்டெடுப்பதற்குக் குழந்தைப் பாடல்கள் காத்திரமான கருவியாகத் திகழக்கூடும் என்பதில் ஐயமில்லை. சக மனிதர்களையும் செடிகொடிகளையும், விலங்குகளையும், பறவைகளையும், தான் சார்ந்திருக்கின்ற சூழலையும் நேசிக்கின்ற மனங்களைக் கொண்டவர்களாகக் குழந்தைகளை வார்த்தெடுக்க வேண்டுமாயின் குழந்தைப்பாடல்களை குழந்தைகளின் எண்ணத்தில் விதைக்கும் பொருட்டு அவர்களின் கைகளில் சேர்க்க வேண்டும்.

## References

Kathiresan, K., (1998) Kootansoru – Orumaipaadu mattrum Urimaipadalkal, Naagu Veeliyeedu, Chennai, India.

Paavannan, (2017) Ettu Maambazhangal, Bharathi Puthagaalaiyam, Chennai, India.

Poovannan, (2012) Kuzhanthai Padalgal, Sahitya Akademi, New Delhi, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License